கோவை மாநகரில் ரூ.252 கோடியில் மேலும் 3 புதிய மேம்பாலங்கள்

அதிகாரி தகவல்

கோவை, அக்.15: கோவை மாநகரில் போக்குவரத்து நெரிசல் நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. இதன் காரணமாக பள்ளி, கல்லூரிக்கு செல்வோர், அலுவலகம் செல்வோர், அன்றாட பணிகளுக்காக வெளியில் செல்வோர் என அனைத்து தரப்பு மக்களும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி தவித்து வருகின்றனர். இதுதவிர, மழை காலங்களில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலால் முக்கிய சாலைகளில் வாகனங்கள் பல மணி நேரம் அணிவகுத்து நிற்கின்றன.

கோவை மாநகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க கோவை-திருச்சி சாலையில் ரூ.250 கோடி செலவில் ரெயின்போ பகுதியில் துவங்கி பங்கு சந்தை வரை 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேம்பாலம் கட்டப்பட்டுள்ளது. இதற்காக, மொத்தம் 111தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மேம்பாலம் 4 வழிப்பாதையாக 17.20 மீட்டர் அகலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதில், சுங்கம் பகுதியில் மட்டும் மேம்பாலத்தின் அகலம் 19.60 மீட்டராக உள்ளது. மேலும், கோவை - மேட்டுப்பாளையம் சாலையில் கவுண்டம்பாளையம் பகுதியில் ரூ.66 கோடியில் நடைபெற்ற மேம்பால பணி 100 சதவீதம் நிறைவடைந்துள்ளன. இதேபோல், கோவை அவினாசி சாலையில் ரூ.1621.30 கோடி மதிப்பில் கோல்டுவின்ஸ் முதல் உப்பிலிபாளையம் வரை உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி கடந்த 2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் துவங்கி நடைபெற்று வருகிறது. கோவை மாநகரின் பிரதான சாலையாக கருதப்படும் அவினாசி சாலையில் விமான நிலையம், பல்வேறு கல்லூரிகள், பள்ளிகள், தொழில் நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள், டைடல் பார்க் போன்றவை அமைந்துள்ளன. சேலம், ஈரோடு, திருப்பூர் என பல முக்கிய நகரங்களுக்கும் முக்கிய வழித்தடமாகவும் இருப்பதால் போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் வகையில் 10.10 கிமீ நீளத்தில் இந்த பறக்கும் பாலம் அமைக்கப்படுகிறது. இப்பாலப் பணிகளில் 5 முக்கியமான இடங்களில் சுரங்க நடைபாதையும் அமைக்கப்பட உள்ளது.

மேலும் மேட்டுப்பாளையம் சாலையில் பெரியநாயக்கன்பாளையம் மற்றும் ஜி.என்.மில்ஸ் பகுதியில் மேம்பாலங்கள் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் கோவையில் காளப்பட்டி ரோடு சந்திப்பு சிங்காநல்லூர், சாய்பாபா காலனி என மேலும் 3 இடங்களில் புதிதாக மேம்பாலம் கட்டப்பட உள்ளது. இது குறித்து தேசிய நெடுஞ்சாலைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: கோவை காளப்பட்டி ரோடு சந்திப்பில் இருந்து துடியலூர் ரோடு சந்திப்பு வரை 1.4 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரூ.60 கோடியே 40 லட்சம் மதிப்பில் மேம்பாலம் கட்டப்பட உள்ளது. சிங்காநல்லூர் உழவர் சந்தை முதல் ஜெயசாந்தி தியேட்டர் வரை 2.4 கிலோ மீட்டர் தூரத்திற்கு ரூ.140 கோடியே 80 லட்சம் மதிப்பில் மேம்பாலம் கட்டப்பட உள்ளது. சாய்பாபா காலனி சந்திப்பில் ரூ.50 கோடியே 93 லட்சம் மதிப்பில் 1.14 கிலோ மீட்டர் தூரத்துக்கு மேம்பாலம் கட்டப்பட உள்ளது. 3 மேம்பாலங்களும் மொத்தம் ரூ.252 கோடி மதிப்பில் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த 3மேம்பாலங்களுக்கும் அதிக அளவில் நிலம் கையகப்படுத்த வேண்டிய தேவை இருக்காது. இந்த மேம்பாலங்கள் கட்டும் பணி இன்னும் இரண்டு மாதத்தில் துவங்க வாய்ப்பு உள்ளது. புதிதாக இந்த 3 மேம்பாலங்கள் கட்டப்பட்டால் திருச்சி ரோடு, காளப்பட்டி ரோடு, சாய்பாபா காலனி சந்திப்பு உள்ளிட்ட இடங்களில் பெரும் அளவு போக்குவரத்து நெரிசல் குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த மேம்பாலங்கள் கட்டும் பணி இன்னும் இரண்டு மாதத்தில் துவங்க வாய்ப்பு உள்ளது. புதிதாக இந்த 3 மேம்பாலங்கள் கட்டப்பட்டால் திருச்சி ரோடு, காளப்பட்டி ரோடு, சாய்பாபா காலனி சந்திப்பு உள்ளிட்ட இடங்களில் பெரும் அளவு போக்குவரத்து நெரிசல் குறையும்.

மெட்ரோ ரயில் குழுவினருடன் ஆலோசனை

இந்த 3 மேம்பாலங்களின் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ள நிலையில் மெட்ரோ ரயில் வழித்தடம் இப்பகுதிகளில் அமைந்தால் அதனால் மேம்பாலப் பணிகள் பாதிக்காமல் இருக்கவும், மேம்பாலத்தை ஒட்டி மெட்ரோ ரயில்வழித்தடம் அமைந்தால் அதற்கு ஏற்றார் போல் மேம்பால வடிவமைப்பு மற்றும் கட்டுமான பணிகளை மேற்கொள்ளவும் மெட்ரோ ரயில் குழுவினருடன் ஆலோசனை மேற்கொள்ளப்படும் என நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

விரைந்து முடிக்க திட்டம்

புதியதாக 3 மேம்பால பணிகள் துவங்கப்பட உள்ள நிலையில் தற்போது நடைபெற்று வரும் ஜி.என்.மில்ஸ் மற்றும் பெரியநாயக்கன் பாளையம், உக்கடம் மேம்பால பணிகளை விரைந்து முடிக்க நெடுஞ்சாலைத்துறையினர் திட்டமிட்டுள்ளனர். இதற்காக, கூடுதல் பணியாளர்களை கொண்டு இரவு மற்றும் பகல் என பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காப்பக குழந்தையை வீட்டிற்கு அனுப்ப ரூ.5 ஆயிரம் லஞ்சம் கேட்ட இருவர் கைது

கோவை, அக்.15: கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தின் பழைய கட்டிடத்தில் இரண்டாவது தளத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தில் குழந்தைகள் நல பாதுகாப்பு உறுப்பினராக தனலட்சுமி, சட்ட உதவியாளர் கார்த்திக் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

இவர்கள், அரசு காப்பகத்தில் இருக்கும் குழந்தையை காப்பகத்தில் இருந்து வீட்டிற்கு அனுப்ப சான்றிதழ் அளிக்க, குழந்தையின் பெற்றோரிடம் ரூ.5 ஆயிரம் கேட்டுள்ளனர். இதையடுத்து, குழந்தையின் பெற்றோர் கோவை லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் அளித்தனர்.

பின்னர், போலீசாரின் ஆலோசனையின்படி, குழந்தையின் பெற்றோர் லஞ்சமாக கேட்ட பணத்தை தனலட்சுமி மற்றும் கார்த்திக் ஆகியோரிடம் நேற்று அளித்தனர். அப்போது, அவர்கள் இருவரையும் லஞ்ச ஒழிப்பு போலீசார் கையும் களவுமாக பிடித்தனர்.

அவர்களிடம் பல மணி நேரம் விசாரணை நடத்தி, இருவரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

குடும்பம் நடத்த மனைவி வரமறுப்பு

போலீஸ் நிலையம் அருகே விஷம் குடித்த வலிபர்

பொள்ளாச்சி, அக்.15: பொள்ளாச்சி பல்லடம் ரோடு நந்தனார் காலனியை சேர்ந்தவர் சுதர்சன் (23). இவரது மனைவி விமலா (20). இருவருக்கும் கருத்து வேறுபாடு இருந்துள்ளது. இதனால், விமலா தனது பெற்றோர் வீட்டுக்கு சென்றார். இதையறிந்த சுதர்சன், தன்னுடன் வீட்டுக்கு வருமாறு விமலாவிடம் கூறி அழைத்தார்.

இந்நிலையில், அனைத்து மகளிர் போலீஸ் ஸ்டேஷனில் விமலா புகார் கொடுக்க சென்றதாக கூறப்படுகிறது. கணவன், மனைவி இருவரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். அப்போது, ஒரு மாதத்திற்கு பிறகு கணவர் வீட்டுக்கு செல்வதாக விமலா தெரிவித்தாக கூறப்படுகிறது.

இதனை ஏற்க மறுத்த சுதர்சன், நேற்று முன்தினம் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்த சிறிது தூரத்தில், தன்னிடம் இருந்த விஷ மருந்தை குடித்தார். மயக்கமடைந்த அவரை அப்பகுதியினர் மீட்டு பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். பின் நேற்று, மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனையில் சுதர்சன் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து போலீசர் விசாரிக்கின்றனர்.

மரக்கன்று நடும் விழா

அப்துல்கலாம் பிறந்தநாளையொட்டி கொடுங்கியத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

உடுமலை, அக். 15: முன்னாள் குடியரசுத் தலைவர் மறைந்த ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் பிறந்தநாளையொட்டி, உடுமலை அருகே உள்ள கொடுங்கியம் ஊராட்சி பகுதிகளில் மரக்கன்று நடும் விழா நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணவேணி தலைமை வகித்தார். துணைத்தலைவர் ஈஸ்வரன் முன்னிலை வகித்தார்.

ஸ்ரீஜிவிஜி விசாலாட்சி நாட்டுநலப்பணி திட்ட குழு மற்றும் டாக்டர் அப்துல்கலாம் மக்கள் பாதுகாப்பு சேவை அறக்கட்டளை இணைந்து மரக்கன்றுகளை நட்டு, தூய்மைப் பணி செய்தனர். இதில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். மாணவி ரூபா நன்றி கூறினார்.

எழுத்து தேர்வு வேண்டாம்

அரசு கல்லூரி கவுரவ விரிவுரையாளர்கள் கல்லூரி கல்வி இயக்குனரிடம் மனு

கோவை, அக். 15: தமிழ்நாடு அரசு கல்லூரி கவுரவ விரிவுரையாளர்கள் கூட்டமைப்பு சார்பில் கவுரவ விரிவுரையாளர்களை எழுத்து தேர்வு மூலம் தேர்வு செய்ய வேண்டாம் என வலியுறுத்தி கோவை மண்டல கல்லூரி கல்வி இணை இயக்குனரிடம் நேற்று மனு அளித்தனர். இது குறித்து கூட்டமைப்பின் தலைவர் செந்தில்குமார் கூறியதாவது: தமிழக அரசு கலைக் கல்லூரிகளில் தற்போது 5,383 பேர் கவுரவ விரிவுரையாளர்களாக பணியாற்றி வருகிறோம். எங்களுக்கு கடந்த 2016-ல் ரூ.15 ஆயிரம் வழங்கப்பட்டு வந்த நிலையில், கடந்த ஆண்டு முதல் ரூ.20 ஆயிரம் ஊதியமாக வழங்கப்படுகிறது. 12 மாதங்கள் பணி செய்தாலும் 11 மாதங்கள் மட்டும் ஊதியம் கிடைக்கிறது. யுஜிசி அறிவுறுத்திய ஊதியத்தில் பணி செய்யவில்லை. கடந்த ஆட்சியில் நடத்தப்பட்ட சிறப்பு தேர்வுக்கான அரசாணையில் இருந்த குறைகளை தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றோம். அதனை சரிசெய்து பின் கவுரவ விரிவுரையாளர்கள் பணிநிரந்தரம் செய்யப்படுவர் என உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்தார். இந்நிலையில், தற்போது பணி நிரந்தரம் செய்ய முடியாது. 200 மதிப்பெண்களுக்கு எழுத்து தேர்வு வைக்கப்படும். இதில், முன்னுரிமை அடிப்படையில் 15 மதிப்பெண்கள் எங்களுக்கு அளிப்பதாக கூறியுள்ளார். இந்த மதிப்பெண் தனியார் கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும். இதனால், பல ஆண்டுகளாக அரசு கல்லூரியில் பணியாற்றி வரும் நாங்கள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. எனவே, எழுத்து தேர்வு முறையை கைவிட வேண்டும். பழைய முறைப்படி கவுரவ விரிவுரையாளர்கள் தேர்வு செய்ய வேண்டும். மேலும், பணிநிரந்தர நடவடிக்கையை போர்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மதுக்கரை ஆர்டிஓ அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு துறை திடீர் சோதனை

மதுக்கரை. அக். 15: மதுக்கரை அருகே பைபாஸ் ரோட்டில் செயல்படும் ஆர்டிஓ அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

மதுக்கரை பைபாஸ் சாலையில் உள்ளது ஆர்டிஏ சோதனைச்சாவடி. இங்கு தமிழகத்தில் இருந்து கேரளாவிற்கு செல்லும் வாகனம் மற்றும் கனரக வாகனங்களின் உரிமம் உள்ளிட்ட பல்வேறு சான்றுகளை சரிபார்த்து அனுப்பும் பணி நடைபெற்று வருகிறது.

இந்தநிலையில் நேற்று மாலை இங்கு மோட்டார் வாகன ஆய்வாளர் ஈஸ்வரி மற்றும் உதவியாளர்கள் யுவராஜ் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் பணியில் இருந்தபோது திடீரென அங்கு வந்த லஞ்ச ஒழிப்பு துறையினர் அலுவலத்தைபூட்டி தீவிர சோதனையில் ஈடுபட்டனர். இந்த சோதனையில் லஞ்ச ஒழிப்பு துறை ஆய்வாளர்கள் பரிமளம்,லதா மற்றும் நான்கு காவலர்கள் ஈடுபட்டனர்.மாலை 5.20. முதல் இரவு மணிவரை நடைபெற்ற இந்த சோதனையில் பணம் கைப்பற்றப்பட்டது.

ஆர்டிஓ அலுவலகத்தில் திடீரென நடைபெற்ற சோதனை அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

மதுக்கரை அருகே பைபாஸ் ரோட்டில் செயல்படும் ஆர்டிஓ அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர்.

நகர்நல மருத்துவமனைகளில் தேவையான மருந்து, மாத்திரை இருப்பு வைக்க உத்தரவு

கோவை, அக்.15: கோவை மாநகராட்சியில் நகர்நல மருத்துவமனைகளின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வு கூட்டம் மாநகராட்சி கமிஷனர் பிரதாப் தலைமையில் நேற்று நடந்தது. கூட்டத்தில், நோயாளிகளிடம் கனிவாக பேச வேண்டும். மக்களை தேடி மருத்துவ முகாமை மாநகரம் முழுவதும் நடத்த வேண்டும். காய்ச்சல் பாதிப்பு உள்ள இடங்களில் சிறப்பு முகாம் உடனடியாக நடத்த வேண்டும். கடந்த ஒரு மாத காலத்தில் ராஜவீதி, உப்பிலிபாளையம், ஆர்.கே.பாய், ரத்தினபுரி, துடியலூர் உள்ளிட்ட மகப்பேறு மருத்துவ மையங்களில் நடந்த 50க்கும் மேற்பட்ட பிரசவங்களில் தாய், சேய் நலமுடன் உள்ளனர்.

இது போல் மற்ற மகப்பேறு மருத்துவமனையிலும் சிறப்பாக செயல்பட வேண்டும். சித்த மருத்துவமனைகளில் நிலவேம்பு குடிநீர், கபசுர குடிநீர் ஆகியவற்றை இருப்பில் வைக்க வேண்டும். அப்டேட் மருந்துகளை குடியிருப்பு பகுதியில் உள்ள தொட்டிகளில் ஊற்றவும், கொசு மருந்து அனைத்து பகுதியிலும் அடிக்க பணியாளர்களை அறிவுறுத்த வேண்டும். லேப் டெக்னீசியன் பணியிடம் விரைவில் நிரப்பப்படும். நகர்நல மையங்களுக்கு தேவையான மருந்து, மாத்திரைகளை இருப்பில் வைத்திருக்க வேண்டும். மழைக்காலம் என்பதால் சிறப்பு கவனமுடன் பணியாற்ற வேண்டும் என மருத்துவர்களுக்கு மாநகராட்சி கமிஷனர் அறிவுறுத்தினார்.

வாக்காளர் அடையாள அட்டையுடன்

ஆதார் எண்ணை இணைக்கும் முகாம்

மாவட்ட கலெக்டர் தகவல்

கோவை, அக்.15: வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் சிறப்பு முகாம் இன்று (15ம் தேதி) மற்றும் நாளை (16ம் தேதி) நடைபெறும் என மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான சமீரன் தெரிவித்துள்ளார் இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கோவை மாவட்டத்தில் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணியானது கடந்த ஆகஸ்ட் மாதம் 1ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. தற்போது வரை மாவட்டத்தில் 10 லட்சத்து 93 ஆயிரத்து 980 வாக்காளர்கள் (36.23 சதவீதம்) மட்டுமே தங்களது ஆதார் விபரங்களை வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைத்துள்ளனர்.

எனவே, இப்பணியை விரைவுப்படுத்தும் வகையில் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று ஆதார் விபரங்களை சேகரிக்கும் சிறப்பு முகாம் இன்று (15ம் தேதி) மற்றும் நாளையும் (16ம் தேதி) ஆகிய இரண்டு தினங்களுக்கு நடைபெறவுள்ளது. வாக்காளர்கள் தங்கள் பகுதிக்கு வரும் வாக்குச் சாவடி நிலை அலுவலர்களிடம் தங்களது ஆதார் விபரங்களை அளித்து வாக்காளர் அடையாள அட்டை எண்ணுடன் ஆதார் எண்ணை இணைக்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும். மேலும், வாக்காளர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடைய ஆதார் விபரங்களை https://www.nvsp.in, https://votersportel.eci.gov.in ஆகிய இணையதளம் மூலமாகவும் வோட்டர்ஸ் ஹெல்ப் லைன், மொபைல் ஆப் என்ற செயலி வழியாகவும் தாங்களாகவே இணைத்து கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

கோவையில் 4 கிலோ குட்காவுடன் வாலிபர் கைது

பீளமேடு, அக்.15: கோவை பீளமேடு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் ரஜினிகாந்த் மற்றும் போலீசார் உடையம்பாளையம் பகுதியில் ரோந்து சென்றனர். அப்போது அந்த பகுதியில் இரு சக்கர வாகனத்தில் பையுடன் வந்த நபரை போலீசார் நிறுத்தி சோதனை செய்தனர். அதில் அவர் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் (குட்கா) வைத்திருந்தது தெரியவந்தது.

விசாரணையில் அவர் புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவிலை சேர்ந்த பசுபதி (வயது 27) என்று தெரியவந்தது. அவரிடமிருந்து 3 கிலோ 940 கிராம் புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் அவர் வந்த ஸ்கூட்டரும் பறிமுதல் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் வைத்திருந்த பசுபதியை போலீசார் கைது செய்தனர். இதுகுறித்து போலீசார் மேலும் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ICICI Home Finance | கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், ஐசிஐசிஐ வங்கி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா
கிளை அலுவலகம்: முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுன் ஹால் எதிரில், திருப்பூர்-641601
[விதி 8(6) விதிமுறையை காண்க]

அசையாச் சொத்துகள் விற்பனை அறிவிப்பு

[illegible]

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர். கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலம் நாள் & நேரம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	B ஆன்டிமுகன் (கடன்தாரர்) கோமதி A (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000857730	[illegible] எண் 18, SF எண் 97/1A & 97/1B1, [illegible] நகர், பல்லடம் சாலை [illegible], [illegible] கிராமம் & [illegible], பல்லடம் வட்டம், திருப்பூர் மாவட்டம்.	₹39,65,184/- 6 அக்டோபர், 2022	Rs. 31,91,250/- Rs. 3,19,125/-	21 அக்டோபர், 2022 காலை 11.00 மணி - பிற்பகல் 03.00 மணி	31 அக்டோபர், 2022 பிற்பகல் 02.00 மணி - 03.00 மணி
2.	M ஆனந்தன் (கடன்தாரர்) M சிவகாமி (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் NHTIR00000893786 & LHTIR00000843367 & NHTIR00000843368	கதவு எண் 5/23, SF எண் 137, [illegible] முதல் தெரு, [illegible] நகர் பிரதான சாலை, [illegible], மங்கலம் சாலை [illegible], திருப்பூர் வட்டம் மற்றும் மாநகராட்சி, திருப்பூர் மாவட்டம்.	₹24,71,378/- 6 அக்டோபர், 2022	Rs. 25,92,000/- Rs. 2,59,200/-	21 அக்டோபர், 2022 காலை 11.00 மணி - பிற்பகல் 03.00 மணி	31 அக்டோபர், 2022 பிற்பகல் 02.00 மணி - 03.00 மணி

[illegible] (URL இணைப்பு– https://sarfaesi.auctiontiger.net/EPROC/) [illegible] 28 அக்டோபர், 2022 மாலை 05.00 மணிக்கு [illegible]
[illegible] ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுன் ஹால் எதிரில், திருப்பூர்-641601 [illegible] 28 அக்டோபர், 2022 மாலை 04.00 மணி [illegible] (EMD) RTGS/ [illegible] (DD) [illegible] ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், முதல் தளம், கதவு எண் 66, ஜி.ஜி. டவர்ஸ், குமரன் சாலை, டவுன் ஹால் எதிரில், திருப்பூர்-641601 [illegible] 28 அக்டோபர், 2022 மாலை 05.00 மணி [illegible] (DD) [illegible] திருப்பூரில் [illegible] "ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்-ஏலம்" [illegible]
[illegible] 7021072869 [illegible] https://www.icicihfc.com
நாள் : அக்டோபர் 15, 2022
இடம் : திருப்பூர்
அதிகாரப்பூர்வ அதிகாரி
ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட்

இப்போது பரபரப்பான விற்பனையில்...
குங்குமம்
ரஜினி நண்பரின் இன்டர் நேஷனல் வாக்!
தீபாவளி ஸ்பெஷல்
2 புத்தகங்கள்
அதே விலை!
தீபாவளிக்கு பெருமை சேர்த்த தமிழன்!
SOWBAGHYA வழங்கும்
Elite
3 BURNER GLASS TOP GAS STOVE
ஸ்டவ் திருவிழா
25 பேருக்கு
கூப்பன் உள்ளே
ஒரே நேரத்தில் அழகிப் போட்டியில் வென்ற அம்மாவும் மகளும்!